# கல்வெட்டுகளில் காணப்பெறும் சங்ககால எழுத்து முறைகள் – ஓர் ஆய்வு

***முனைவர் ஞா. இந்திரஜித்***
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவில்பட்டி.

**மலர்: 4**

**இதழ்: 1**


**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

## ஆய்வுச்சுருக்கம்

*உலகின் தொல்பழங்கால மனிதன் உணர்வுகளைத் குறிப்பாலேயே முதலில் உணர்த்தியுள்ளான். கால வளர்ச்சியில் உணர்ச்சியோடு, அறிவும் அமைத்து மனவளர்ச்சி பெற்ற மனிதனாக ஆகியுள்ளான். அந்நிலையில் வாயொலிகளாலும் செய்கையாலும் தனது விருப்பங்களைப் பிறருக்கு உணர்த்தியுள்ளான். தான் கண்டறிந்த நிகழ்ச்சிகளையும், பொருள்களையும் பிறர் அறியுமாறு குகைத்தடங்களில், கோட்டுருவில் வரைந்து வைக்கும் முயற்சியினையும் கையாண்டுள்ளான். பின்னர் ஒலியில் பல மாற்றங்களை மனிதன் திட்டமாக ஆக்கிக்கொண்டபோது மொழி உருவாகியுள்ளது. மொழிக்கு அமைந்த அடையாள வரிவடிவங்கள் பின்னர் தோன்றி எழுத்தென வளர்ச்சி பெற்றுள்ளன. நிலவுலகில் பழைய தடங்களில் ஒன்றான எகிப்து நாட்டிலுள்ள பிரமிடுகளில் வரையப்பட்டுள்ள கோட்டுருவங்கள், மொழித் திறனமைந்த சித்திர எழுத்துகளாக உள்ளதனைக் கண்டறிந்துள்ளனர். மிகப் பழமையான நாகரிகத்தினர் என்ற புனிதர் ஈராசு குறிப்பிடும் சிந்து சமவெளி மக்களும், சித்திர எழுத்துகளையே பயன்படுத்தியுள்ளனர். இவ்வாறு தோன்றிய சித்திர எழுத்து முறையானது கல்வெட்டுகளில் அன்றைய கால மக்களின் சமூக, பொருளாதார பண்பாட்டினை விளக்கும் மெய்யியல் காட்சியாக கண்முன்னே அமைந்துள்ளன. இச்சித்திர எழுத்துகள் நாளடைவில் பண்டைய கால வரலாற்றை உணர்த்தும் காலக் கண்ணாடியான கல்வெட்டுகளில் பிராமி எழுத்துக்கள், கிரந்த எழுத்துக்கள், வட்டெழுத்துக்கள் என்று பரிணாம வடிவம் பெற்று விளங்கின. கல்வெட்டுகளில் காணப்படும் இந்த எழுத்து முறைகளை முறையாக கற்றறிந்தால் மட்டுமே பண்டைய வரலாற்றை அறிய முடியும். எனவே கல்வெட்டுகளில் காணப்படும் இவ்வெழுத்து முறைகளைத் தக்க சான்றுடன் விளக்கி அதன் சிறப்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*



**முன்னுரை**

ஆதி மனிதன் பல்வேறு நிலைகளில் மொழிகளின் பரிணாம வடிவம் பெற்ற பின்பு தான் கண்ட மெய்யறிந்த செய்திகளைத் தான் வசித்த குகைகளிலும், வாழிடங்களிலும் பல்வேறு நிலைகளில் குறித்து வைத்தான். அவைதான் இன்று பண்டைய கால வரலாற்றைக் காட்டும் கல்வெட்டுகளாகவும், இலக்கியங்களாகவும், வடிவம் கொண்டுள்ளன. இத்தகைய கல்வெட்டுகள் சமகாலத்தில் ஆவணங்களாகத் தோற்றுவிக்கப்பட்டு இன்று அவை பழமையை அறிய வரலாற்றுச் சான்றுகளாக உதவுகின்றன.

கல்வெட்டுகள் என்பவை கவின்மிகு சொல்வெட்டுகள்; கருத்தைக் கவரும் கற்பனை கலவாத காவியத் திட்டுகள்; இலக்கியச் சுவைகொண்ட இனிய சொற்கள் மற்றும் கருத்தாழம் கொண்ட தொடர்கள் ஆகியவற்றின் கருவூலம் ஆகும். அரசர்கள் அள்ளிக் கொடுத்த கொடைகளின் அகச் சான்றுகள், குடிமக்கள் அவர்களின் உணர்வுகள், கூடி வாழும் கொள்கைகள், கொண்டாடும் விழாக்கள், பழக்கவழக்கம், பண்பாடுகள் ஆகியவற்றைக் வடித்துக் காட்டும் வரலாற்றுப் பேழைகள் ஆகும்.

கல்வெட்டுகளில் பொருளடக்கமாக அமையும் செய்திகள், அரசியல் சமூகப் பண்பாட்டு வரலாற்றை அறிய உதவுவது போல, கல்வெட்டில் எழுத்து வடிவில் அமையும் மொழி, மொழி வரலாற்றை அறிய உதவும் அரிய சான்றாகத் துணை செய்கின்றது. இலக்கிய மொழியைவிடக் கல்வெட்டு மொழி, இயற்கையான பேச்சு மொழியை ஒட்டி அமைவதால், மொழி ஆய்வுக்குக் கல்வெட்டு மொழி மிகுந்த பயனுடையது. இலக்கியம் ஏட்டுச் சுவடியில் எழுதப்பட்டு வந்ததால் காலந்தோறும் ஏற்பட்ட எழுத்து, பேச்சு மாற்றங்கள் ஏட்டிலக்கிய மொழியில் நுழைந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால், கல்வெட்டுகள் மூலச் சாசனங்களாக இருப்பதால், அவை இறந்த கால மொழி இயல்புகளைத் திரிபின்றி உணர்த்தும் சிறப்புடையவை.

இலக்கியம் போலன்றி கல்வெட்டு மொழிகள், தமிழர் வாழ்வின் பல்வேறு துறைகளிலும் வழங்கிய மொழி வழக்கைக் காட்டும் கண்ணாடிகள். கற்றோர் முதல் கல்லாதார் வரை அம்மொழியைப் பயன்படுத்தியதால், அக்கல்வெட்டு மொழி வழக்கு, அன்றைய காலத்தைக் காட்டும் சிறந்த கருவியாக அமைகிறது. இன்று நாம் எழுதும் வடிவில் முற்கால எழுத்துகள் அனைத்தும் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்தும் முறைகளிலும், சித்திர வடிவங்களையும் அடிப்படையாகக் கொண்டவை. அவை குறுநில மன்னர்களின் கோட்பாடுகள், உடன்படிக்கைள் அரசர்களின் ஆணைகள், ஆவணங்கள் ஆகியவற்றின் பதிவுகள் ஆகும்.

ஒவ்வொரு கல்வெட்டும் வாழ்வியல் நெறிகளை வழிநடத்திச் செல்லும் சட்டங்களாகவும், சான்றுகளாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும் உள்ளன. கலைகளின் கருவூலமாகவும் அமைந்துள்ளன. பொருளியல் நிலையின் பொருத்தப்பாட்டை விளக்குகின்றன. பண்பாட்டின் படையல்களாக மிளிர்கின்றன அரசியல் நெறிமுறைகளை விளக்கும் அறிவுக் களஞ்சியமாக விளங்கி வளர்ச்சி மாற்றங்களின் வழிகாட்டியாக நிற்கின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த கல்வெட்டு களில் கற்பனைக்கோ, புனைந்துரைக்கவோ, கட்டுக்கதைகளுக்கோ உணர்வுமயமான நடைக்கோ, இடமில்லை.

சிறப்பு வாய்ந்த கல்வெட்டு மொழிகள் எழுத்து முறைகள் சிலவற்றை இங்குக் காணலாம்.


1. சித்திர எழுத்துக்கள்
2. பிராமி எழுத்துக்கள்
3. கிரகந்த எழுத்துக்கள்
4. வட்டெழுத்துக்கள்.

இவ்வகை எழுத்து முறைகளைக் கொண்ட பெரும்பாலான கல்வெட்டுகள் வடஇந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் அதிகளவில் கிடைத்துள்ளன. ஒவ்வொரு காலவரிசை, அரச வரிசைகளில் அடிப்படையில் இவ்வெழுத்து முறைகள் கொண்ட கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

### சித்திர எழுத்துகள்

மனிதன், கால வளர்ச்சியில் தன்செயல்களையும், தனக்குப் பிறவற்றால் சூழலால் ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும் உணர்ந்து நினைவில்கொண்ட காலத்தில்,தான் செய்த நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் அடையாளப்படுத்த முயன்றுள்ளான். அதன் பயனாகத்தான் வாழ்ந்திருந்த மலைக்குகைகளில் வெண்மை, பழுப்பு ஆகிய நிறங்களில் கிடைத்த பூங்கற்களால் சித்திரங்கள் வரைந்துள்ளான். பாறையில் தான் கருதியதை ஏதோ ஒருவடிவம் வரைந்தவனுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கலாம். எனினும் அவை பிறருக்குச் செய்திகளை அறிவிக்கும்கருவியாகவும் அமைந்திருந்தன. குகைச்சித்திரங்கள்அடையாளஉருவங்களாகவே வரையப்பட்டுள்ளன. இத்தகைய குகைச் சித்திரங்கள், தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செங்கற்பட்டு மலையிலும், மதுரை மாவட்டத்திலுள்ள விறு மலையிலும் கிடைத்துள்ளன.

குகைச் சித்திரங்களின் தோற்றத் தினைக்கொண்டு சிந்திக்கும்போது அறிவிலும், நாகரிகத்திலும் தெளிவுபெறாத வாழ்க்கையை உடைய ஆதிமனிதனே தான் செய்த அருஞ்செயல்களையும், தான் கண்ட கொடிய மிருகங்களையும், உணவிற்கான பொருட்களையும், தன்னைச் சார்ந்தவர்களையும், பிறரும் கண்டறிந்து கொள்வதற்குரிய சுவடாகவே வரைந்து காட்டியுள்ளான் என்பது புலனாகிறது. குகைச் சித்திரங்களை எழுதிய மக்களின் காலம் மறைந்தொழிய பின்னர் மனிதருக்கு அச்சித்திரங்களை உணர்த்தும் செய்தியினை அறிந்துகொள்வதற்கு இயலாது போனது. அவற்றைக் கொண்டு அடையாள வடிவங்களை உருவாக்கிக் கொள்ளும் முயற்சி தோன்றியுள்ளது. தாங்கள் பேசி வந்த மொழிக்குரிய சொற்களைச் சித்திர வடிவில் உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவை அடையாள எழுத்துகள் அல்லது சித்திர எழுத்துகள் என்ற பெயரில் குறிக்கப்படுகின்றன.



வடஇந்தியாவில் சிந்து சமவெளிப் பள்ளத்தாக்கின் நெடுகிலும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், “பழமையான மக்கள் நகரப் பகுதிகளை அகழ்ந்து ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். அவை மொகஞ்ச தாரோ, ஹரப்பா நாகரிகம் எனப்பட்டது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு வாழ்ந்திருந்த மக்களின் நாகரிகத்தினைப் புலப்படுத்தியுள்ளனர். அகழ்வாய்வில் கிடைத்த பழம்பொருட்களில் சித்திர எழுத்துகளோடு கூடிய முத்திரைகள், பிற சின்னங்கள் கிடைத்துள்ளன. அவை அங்கு அக்காலத்தில் வாழ்ந்திருந்த தமிழரினமக்களின் எழுத்து வடிவங்கள் என்று கூறப்படுகின்றன. பொதுவாகச் சித்திர எழுத்துகள் அடையாள வடிவங்கள், நேர்கோடுகள், குறுக்குக்

கோடுகள், குறுக்கும் நெடுக்குமான கோடுகள், வளைவுக் கோடுகள், வட்டங்கள் புள்ளிகள் ஆகிய வரிவடிவங்களாகவும் குறிக்கப்பட்டுள்ளன.

### பிராமி எழுத்துக்கள்

பொதுவாக இந்தியாவில் முந்தைய காலங்களில் “பிராமி” “கரோஷ்டி” என்ற இருவகை எழுத்துகளே வழக்கத்திலிருந்தன என்பது 11ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. பிராமி எழுத்துகளே இந்தியா முழுவதும் வழக்கத்திலிருந்தன.

இவ்வெழுத்துக்களுக்குப் பின்னர் வந்த பிராந்திய வரி வடிவங்கள் எழுச்சி பெற்று வளர்ந்து “சுபிராமி” என்ற நிலை அடைந்துள்ளன என்பது ஏற்கப்பட்ட கருத்தாகும். “கரோஷ்டி” எழுத்துக்கள் இந்தியாவின் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட காலகட்டம் மட்டுமே வழக்கத்திலிருந்தன. பிராமி வடிவ எழுத்துகள் பெரும்பாலும் “அசோக பிராமி” என்றும் மௌரிய பிராமி என்றும் அழைக்கப்பட்டன. பிராமி மொழி, ஆதிகாலப் பிராகிருத மொழிகளை எழுத பயன்பட்டது. பெரும்பாலும் கல்வெட்டு களிலும் சமய நூல்களை எழுதவுமே இந்த எழுத்து முறை பயன்பட்டது. வடநாட்டில் புத்தமதக் கொள்கைகளைப் பரப்ப மௌரிய மன்னர் அசோகர் பயன்படுத்திய பிராமி எழுத்து இவருக்கு முன் சுமார் நூறாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் புழங்கி வந்துள்ளது. அசோக மன்னரது கல்வெட்டுகள் பாறைகளிலும், தூண்களிலும், குகைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பான்மைவை பிராமி எழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை கிடைத்துள்ள எண்ணற்ற கல்வெட்டுகளில் தொன்மையானவை பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளே ஆகும்.




இக்கல்வெட்டுகளின் காலம் சுமார் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.மூன்றாம் நூற்றாண்டு வரை ஆகும். இக்காலக் கல்வெட்டுகள் பெரியார் மாவட்டத்திலுள்ள அரச்சலூர், மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், ஆனைமலை, கீழவளைவு, திருப்பரங்குன்றம், திருவாதவூர், திருச்சி மாவட்டத்திலுள்ள புகலூர் முதலிய இடங்களில் இருக்கின்றன. இக்கல்வெட்டுகள் பெரும்பாலும் சமணத் துறவிகளுக்கு வணிகர்களும், அரசர்களும் “பாழி” அமைத்து கொடுத்ததைக் கூறுகின்றன. அதாவது குகையின் தளத்தைச் சமன்படுத்தி அவர்கள் உறைவதற்க்கு ஏற்றதாகச் செய்தளித்தனர் என இக்கல்வெட்டுகள் இயம்புகின்றன. திருச்சி மாவட்டத்திலுள்ள “புகளூர்” என்ற கிராமத்தில் உள்ள பிராமி எழுத்திலான கல்வெட்டு சேரமன்னன் ஆதன் சேரல் இரும்பொறை பேரனும், பெருங்கடுங்கோவின் மகனுமாகிய “இளங்கடுங்கோ” ஆற்றூரைச் சார்ந்த செங்காயபன் என்ற சமணத் துறவிக்கு அமைத்துக்கொடுத்த கற்படுக்கையைப் பற்றிக் கூறுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பிராமி எழுத்துக்கள் சமஸ்கிருதத்திற்கு முன்னோடியாகும். அவை தமிழுக்கு வரி வடிவமாகவும் அமையப்பெற்றுள்ளன எனலாம்.

### பிராமி மொழி கல்வெட்டு

### கிரகந்த எழுத்துக்கள்


“கிரகந்த” என்ற சொல் வடமொழியில் நூல் என்று பொருள்படும். எனவே நூலை எழுதுவதற்கு அடிப்படையான எழுத்தையும் “கிரகந்த” என்ற சொல்லால் குறித்தனர் கிரந்த எழுத்தின்

வடிவை உற்று நோக்குமிடத்து தமிழ் மொழியின் ஒலி அல்லது வடமொழியின் ஒலி வரும் இடங்களிலும் வடமொழிச் சொல்லை எழுத நேருகின்றபோது கிரந்த எழுத்தைத் தமிழகத்தில் பயன்படுத்தி வந்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது. தமிழகக் கல்வெட்டுகளில் பிராக்ருதச் சொற்களை எழுத உபயோகிக்கப்பட்ட வடமொழி எழுத்துகளைக் கிரந்த எழுத்து என்று கூறலாம். தமிழகத்தில் பல குகைகளில் உள்ள “தமிழ்” கல்வெட்டு களில் “ஸ” வடமொழி எழுத்தும் “சுத” என்ற வர்க்க எழுத்தும் கிரந்த வடிவில் காணப்படுகின்றன.




## கிரந்த எழுத்து கல்வெட்டு

அரிக்கமேட்டில் கிடைத்த பானை ஏடு களின் மேல் உள்ள தமிழ் எழுத்துக்களோடு கிரந்த எழுத்து சிலவும் காணப்படுகின்றன. இந்த எழுத்துகளைக் கிரந்த எழுத்தின் முன்னோடி என்று கூறலாம். பல்லவர் காலத்தில் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற கிரந்த எழுத்துகள் “பல்லவ” கிரந்தம் என்று அழைக்கப்படுகின்றன. பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் பல்லவர்களைப் போல தமிழிலும், சமஸ்கிருதத்திலும் சாசனங்களைப் பொறித்தனர். ஆனால் பாண்டியரது கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், சமஸ்கிருத மொழி வரும் இடங்களில் “கிரந்த” எழுத்துகளையே பயன்படுத்தினர். அதேபோல் சோழ மன்னர்களின் செப்புப் பட்டயங்களில் சில செய்திகளைக் கிரந்த எழுத்தில் காண முடிகிறது.



## பல்லவர் கால கிரந்த கல்வெட்டு

பல்லவர்கள் காலத்தில் பெற்றிருந்த சிறப்புத் தன்மையைச் சேர்ந்த எழுத்து, விஜய நகர மன்னர்கள் காலத்தில் பெற்றது. இவர்கள் பல்லவர்களைப் போலவே செப்புப் பட்டயங்களில் மட்டுமல்லாது கல்வெட்டுகளிலும் கிரந்த எழுத்தைப் பெருமளவில் பயன்படுத்தினர். இவர்கள் காலத்தில் மன்னர்களில் மெய்க்கீர்த்தியில் காணப்படும் கல்வெட்டுப் பகுதி கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கும்.

விஜயநகர மன்னர்கள் கல்வெட்டின் மையப்பகுதிகளில் தமிழகத்தில் வெளியான சமஸ்கிருத நூல்களும் பெரும்பாலும் கிரந்த எழுத்திலே எழுதப்பட்டிருந்தன. இதனால் பின்னாளில் “கிரந்தம்” என்றாலே “சமஸ்கிருதம் நூல்” என்று வழங்கலாயிற்று.

தமிழகத்தில் வழங்கி வந்த கிரந்த எழுத்தின் வளர்ச்சியை மூன்று கட்டமாக ஆராய்ச்சியாளர்கள் பிரித்து ள்ளனர். கி.பி நான்காம் நூற்றாண்டிலிருது கிபி ஆறாம் நூற்றாண்டு வரை வழங்கிய கிரந்த எழுத்தைப் “பழமையான கிரந்த எழுத்து” அல்லது வளர்ச்சியடைந்த தமிழ் எழுத்து என்றும், கிபி ஏழாம் நூற்றாண்டிலிருந்து கிபி ஒன்பதாம் நூற்றாண்டு வரை வழங்கிய கிரந்த எழுத்தைப் “பல்லவ கிரந்தம்” என்றும் கிபி 10-ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை உள்ள காலங்களை “மூன்றாம் கட்ட வளர்ச்சி” என்றும் கூறுவர்.

**வட்டெழுத்துக்கள்**

தமிழெழுத்துகளில் தொன்மையான எழுத்துகளாகச் காணப்பெறுவது வட்டெழுத்து களாகும். வட்டெழுத்துகள் பழந்தமிழகத்தைப் பொருத்தவரையில் பாண்டிய நாட்டில் சிறப்புற வழக்கில் இருந்துள்ளது. கிபி. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய வட்டெழுத்து தொண்டை நாட்டில் எட்டாம் நூற்றாண்டு வரை பரவியது. பாண்டிய நாட்டில் பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரையிலும் நிலவியது. பல்லவர் ஆட்சியில் வட்டடெழுத்துடன் கிரந்தமும் கலந்த சொற்கள் படைக்கப்பட்டிருப்பது பல்லவர் சமஸ்கிருததினைப் பேசியும், எழுதியும் வந்ததோடு தமிழ்நாட்டில் அவர்கள் ஆட்சி நிலவியபோது தமிழ்மொழி வழக்கிற்கேற்ப வடமொழிச் சொற்களைப் படைப்பதற்கு கிரந்த எழுத்துகளைக் கையாண்ட செயலாகுமென்று கருத முடிகிறது.

**வட்டெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களாக அறியப்படும் எழுத்துமுறை**

பாண்டிய நாடு செந்தமிழ் நாடாதலின் அந்நாட்டின் தமிழுக்குரிய வரிவடிவு வட்டெழுத்தாகவே தொடர்ந்ததால், வட்டெழுத்துகளால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், தமிழ் இலக்கிய இலக்கண மரபுகளில் பிழையில்லாமல் உள்ளன எனக் காண முடிகிறது. சேர நாட்டில் பண்டைய காலம் முதலாகத் தமிழ் மொழிக்கமைந்த வட்டெழுத்துகளால் அமைந்த எழுத்து முறையொன்றே வழக்கில் தொடர்ந்துள்ளது. சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் வட்டெழுத்துகளாவே படைக்கப்பட்டுள்ளன. கிரந்த எழுத்து முறையைப் போலவே வட்டெழுத்துகளின் வளர்ச்சியை வரலாற்றறிஞர்கள் மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கின்றனர். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் வட்டெழுத்தின் முதல் வளர்ச்சி காலம். இக்காலகட்டத்தில் வட்டெழுத்துகள் தமிழ் எழுத்துகளைப் போல நேர்நேராக எழுதப்பட்டள்ளது. கிபி. எட்டாம் நூற்றாண்டு முதல் பதிமூன்றாம் வரை வளர்ந்த வளர்ச்சி இரண்டாம் கட்ட வளர்ச்சி காலம் ஆகும். ஓலையில் எழுத வேண்டி நேர்ந்ததால் ஒரு எழுத்தோடு மற்றொரு எழுத்தை விரைவாக எழுத வேண்டி இருந்ததாலும் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். கோவை, தர்மபுரி, திருநெல்வேலி மாவட்ட கல்வெட்டுகளில் இத்தகைய எழுத்து முறை காணப்படுகின்றது. கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை உள்ள காலம் மூன்றாம் கட்ட வளர்ச்சி காலம் ஆகும். இரண்டாம் கட்ட வளர்ச்சியில் இருந்து சிறு வேற்றுமைகள் கூட மூன்றாம் கட்ட வளர்ச்சியில் இல்லாது ஆகி உள்ளன. இதற்கு முக்கிய காரணம் அக்காலகட்ட மக்கள், வட்டெழுத்தைப் புரிந்துகொள்வதில் பழக்கம் ஏற்பட்டு இருந்ததேயாகும்.

**சோழர்காலக் கல்வெட்டுகளில் காணப்படும் வட்டெழுத்துக்கள்**

தமிழகப் பகுதிகளில் வட்டெழுத்து பிற மொழிக்குரிய எழுத்துக்களோடு கலந்த நிலையிலும், திரிந்த நிலையிலும், தனித்தும் காணப்படுவதன் காரணத்திணைக் காண்பது இன்றியமையாததாகும்.



தமிழகத்தின் வட பகுதியில் வட்டெழுத்தோடு திரிந்த பிராமி எழுத்துக்கள் கலந்திருப்பது அசோக மன்னரது

முயற்சியால் அப்பகுதிலும், கன்னடம், தெலுங்கு நாடுகளில் பிராமி எழுத்துக்கள் பரவலாகக் குருமார்களாலும், வைதிக நெறியாளர்களாலும் கையாளப்பட்டு நாளடைவில் திரிந்த நிலையில் தென்னிந்திய பிராமி என்ற பெயருக்குரியதாக இருந்துள்ளது. பிராமி எழுத்துக்களை அறிந்திருந்த அவர்கள் ஈமச் சின்னமாகிய நடுகற்களில் பொறிப்பதற்குரியதாக தமிழ்ச் சொற்களில் எழுதிய செய்திகளாகவே உள்ளன.

பிராமி, வட்டெழுத்து ஆகிய இரண்டெழுத்தும் கலந்த கல்வெட்டுகள் நடுகற்களிலேயே கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திறனாய்வு

தமிழகத்தின் தொன்மை, கடல் கொண்ட குமரி நாட்டிலிருந்து தொடங்குவதாகும். தமிழ்மொழிக்குப் பண்டைத்தமிழர் சித்திர எழுத்துகளினின்றும் எழுத்து வடிவங்களை உருவாக்கி வந்துள்ளனர். சங்கங்கள் நிறுவித் தமிழ் மொழியில் புலவர்களைக்கொண்டு நூல்கள் பல இயற்றச்செய்து மொழிக்கு ஆக்கம் கண்டுள்ளனர். கடைச்சங்கம் வையை ஆற்றங்கரை மதுரையில் நிகழ்ந்துள்ளது. இதன் காலம். கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து என்பர். அக்காலத்தில் புலவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் எந்த எழுத்துக்களில் எழுதப்பட்டன? அவ்வெழுத்து முறை முன்னைய குமரிநாட்டுத் தமிழர் தொடர்ந்த எழுத்து முறையாகத் தான் இருக்கமுடியும் என ஆராய்ச்சியாளர்கள் கூறிவுள்ளனர்.

வடஇந்திய பண்டைய நாகரிகம் வேறு, தமிழகத்தின் பண்டைய நாகரிகம் வேறு. தாய்மொழிக்குச் சங்கங்கள் நிறுவி மொழி வளர்ச்சி செய்த தமிழரைப்போல் இந்தியாவில் பிறமொழியாளர் செய்ததில்லை. தொல்பழங்காலந் தொட்டே தமிழர் மொழி, தமிழ்மொழியாகவே சொல்லும் எழுத்தும் கொண்டதாகவே வந்துள்ளது. அதனால் தான் கன்னித்தமிழ், முத்தமிழ் என்று சிறப்புப் பெயர்களைத் தமிழ்மொழி பெற்றுள்ளது.

அசோகன் திருத்தியமைத்துச் சமஸ்கிருத நெறியில் வளர்ந்த பிராமி எழுத்துக்கள், வடநாட்டு மொழிகளுக்கு இலக்காகியுள்ளன. தமிழகத்தின் வரலாறும் மக்கள் நாகரிகமும் தனித்தன்மை பெற்றதால் தங்கள் தாய்மொழிக்குத் தமிழர் பண்டைய காலந்தொட்டே எழுத்துருவம் கண்டிருந்தனர். தொல்காப்பியர் தமிழ் எழுத்துகளுக்குரிய வரிவடிவங்களையும் முறையாகக் குறித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சமண சமயத் துறவிகள் மலைக்குகைகளில் பொறித்துள்ள பிராமி எழுத்துக்களாலான கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களைக்கொண்டு அதினின்றும் தமிழெழுத்துக்கள் வரி வடிவுகொண்டன என்பது ஆராயத்தக்கது. தமிழுக்கென்று எழுத்துமுறைகள் தோன்றி இலக்கணத்துடன் வளர்ந்து வந்திருக்கும் போது பிற எழுத்து முறையினின்றும் வந்ததென்பது பொருந்தவில்லை.

வட்டெழுத்து முறை, தமிழின் பண்டைய எழுத்து முறையாகத் தொடர்ந்துள்ளது. சோழநாட்டில் தமிழ் எழுத்து முறையொன்று வட்டெழுத்துக்கு இணையாக வளர்ந்து வந்துள்ளது. வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இமயச்சாரலிலும் கிடைத்துள்ளன. தொல்காப்பியம், திருக்குறள், மதுரைக்காஞ்சி போன்ற சங்ககால நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும் தமிழ் வட்டெழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன.

பாண்டிய நாட்டிலுள்ள குகை பிராமி எழுத்துக்கள் பிழையாகவும் முறையற்றும் உள்ளன. நெடிய வரிகளாகப் பொறிக்கப்பட்ட

வட்டெழுத்துத் தமிழ்க் கல்வெட்டுகள் அழகாகவும் எழுத்துப்பிழை, சொற்பிழை தொடர்பிழை இல்லாமல் செம்மையாகவுள்ளன.

இராசராசன் காலத்தில் தமிழெழுத்துக்கள் வரிவடிவில் உள்ளன. அம்முறையிலேயே எழுத்துமுறை தொடர்ந்து, பிற்காலத்தில் ஏடுகளில் எழுதுவதில் சிறிது, திருத்த முற்றதாக உள்ளது. இத்தகைய சிறப்புமிக்க எழுத்து முறைகளைக் கொண்ட கல்வெட்டுகள் என்றென்றும் பழந்தமிழரின் சமூக, பொருளாதார பண்பாட்டு முறைகளை எடுத்து ரைத்துத் தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழர் பண்பாடு, நாகரிகத்தையும் எடுத்துரைக்கிறது.

**துணைநூற் பட்டியல்**

1. கு.சுவாமிநாதன், தமிழ்க் கல்வெட்டுகள் இருபது.
2. ஆவணம் இதழ் - 7.
3. தேவநேயப் பாவணர், ஒப்பியல் மொழி நூல்.
4. வி.சுந்தரம, கல் சொல்லும் கதைகள.
5. நடனகாசிநாதன், கல்லெழுத்துக் கலை.
6. இரா.சுப்பிரமணிய நாவலர், தமிழ்மொழி வரலாறு.
7. இரா.கிருசுணமூர்த்தி, தமிழ் வட்டெழுத்து.
8. தி.ரா.சுப்பிரமணியம், தென்னிந்திய கோவில் சாசனங்கள்.
9. இரா.கிருசுணமூர்த்தி, சேரநாட்டில் தமிழ் வட்டெழுத்துக்கள்.
10. கி.நாச்சிமுத்து, கல்வெட்டுக்களும் சுவடிகளும்.
11. சூ.சுவாமிநாதன், கல்லெழுத்துக் காலச் சுவடுகள்.
12. கி.கோவிந்ததாசனார். தமிழெழுத்தின் வரிவடிவம்.
13. சு.துரைசாமிப் பிள்ளை, தமிழ் இலக்கிய சங்ககாலம்.